நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்செந்தூர்.
முன்னிலை : திரு. சா. வரதராஜன், பி.ஏ., பில்.,
நீதித்துறை நடுவர், திருச்செந்தூர்
2023 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
Crl.M.P. No. 2807 of 2023 in CC. No. 20/2021

காவல் ஆய்வாளர்,
குலசேகரப்பட்டிணம் காவல்நிலையம்,
குற்ற எண். 244/2012 . . . மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

...எதிர்...

சூப்பர் என்ற சிவா என்ற சிவப்பிரகாசம்,
த/பெ. அய்யாத்துரை, . . . எதிர்மனுதாரர்/4 ஆவது எதிரி

எதிரியின் வழக்கறிஞர் :– திரு. T. சுந்தரபாபு

**<u>உத்தரவு</u>**

1) குலசேகரப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 244/2012 – இ.த.ச பிரிவு 457, 380, 411 – வழக்கானது மேற்படி காவல்நிலைய ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் CC. No. 106/2013 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டது. அந்த வழக்கில் மொத்தம் 8 எதிரிகள் ஆவார்கள். அந்த வழக்கில் சில எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் வழக்கு CC. No. 275/2017 ஆக எஞ்சிய எதிரிகளுக்கு எதிராக பிரித்தெடுக்கப்பட்டது. அதில் இந்த எதிரி சூப்பர் என்ற சிவா என்ற சிவப்பிரகாசம் என்பவரும் ஒருவர் ஆவார்.

2) அவர் இந்த வழக்கில் தொடர்ந்து முன்னிலையாவேன் என்றும், அவ்வாறு முன்னிலையாக தவறும்போது, அரசுக்கு ரூபாய். 1,00,000/– ஐ தண்டத்தொகையாக செலுத்துவேன் என்றும் 20.06.2013 ஆம் தேதி பிணைமுறி எழுதிக்கொடுத்துள்ளார். ஆனால், அவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி படி நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் அவருக்கு எதிராக பிணையில்லா பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு பிறகு நிறைவேற்றப்பட்டு, தற்போது கு.வி.மு.ச பிரிவு 309 இன் கீழ் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்.

3) எதிரி அவர் எழுதிக்கொடுத்த பிணைமுறியை மீறியதற்காக அவர் ஏன் அரசுக்கு தண்டத்தொகையாக பிணைமுறி தொகை ரூபாய். 1,00,000/–

செலுத்தக்கூடாது என்பதற்கு கு.வி.மு.ச பிரிவு 446 இன் கீழ் இந்த நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளது.

4) எதிரி தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில், அவருடைய அறியாமையின் காரணமாக வழக்கு வாய்தா தேதி தெரியவில்லை என்றும், தாய்வழக்கிலிருந்து எதிரிக்கு எதிரான வழக்கு பிரித்தெடுக்கப்பட்ட பிறகு அவருக்கு அழைப்பாணை எதுவும் சார்பு செய்யப்படவில்லை என்றும், அவருடைய அண்ணனின் குழந்தைகளை அவர்தான் பராமரித்து வருவதாகவும் கூறி, இந்த நடவடிக்கையிலிருந்து அவரை விடுவிக்கும்படி கூறியுள்ளார்.

5) எதிரிக்கு வாய்தா தேதி தெரியவில்லை என்பதால் 5 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருந்து வந்தார் என்று கூறும் காரணம் ஏற்றக்கொள்ளத்தக்க வகையில் இல்லை. மேலும், எதிரி இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்காக முன்னிலையாகாமல் இருந்து வந்ததற்கு கூறும் மற்ற காரணங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6) அதேவேளையில், எதிரி தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில், அவர் இந்த வழக்கு குற்றத்தை ஒப்புக்கொள்ள தயாராக இருப்பதாகவும், அவருடைய அண்ணன் குழந்தைகளை பராமரித்து வரும் நிலையில் அவருக்கு ரூபாய். 1,00,000/- ஐ தண்டத்தொகையாக செலுத்த போதுமான வசதி இல்லை என்று கூறியுள்ளார். எனவே, எதிரி இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாவதாக ரூபாய். 1,00,000/- த்திற்கு பிணையம் எழுதிக்கொடுத்துவிட்டு, நீதிமன்றத்தில் போதுமான காரணம் இல்லாமல் முன்னிலையாகாமல் இருந்ததால் அவர், அரசுக்கு ரூபாய். 10,000/- தண்டத்தொகை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு அவர் தண்டத்தொகையை செலுத்த தவறும் போது கு.வி.மு.ச பிரிவு 446 இன் படி ஆறு மாதங்கள் உரிமையியல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் 29.09.2023 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

(ஓம்.திரு.சா.வரதராஜன்)

*J.M. Court, Tiruchendur* *Dated:29.09.2023*

**நீதித்துறை நடுவர்**
**திருச்செந்தூர்**

**/உண்மை நகல்/JR**